**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 62/2023 DW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சரவணன் | த–பெ /க.பெ. | சுப்பு |
| ஊர்: | : | கோட்டையூர் | சமயம்: | |
| வயது: | : | 57/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | அடகு கடை | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.01.2026**

----------------------------------------------------------------------------------------------------

**29.01.2026**

**முதல் விசாரணை:**

1) நான் 2018 ம் வருடம் ஜனவரி மாதம் புகார்தாரரிடம் இருந்து ரூ.1 லட்சம் கடனாக பெற்றேன். அதற்கு ஆதரவாக கரூர் வைஸ்யா வங்கி புதுவயல் கிளை காசோலை ஒன்றை புகார்தாரரிடம் கொடுத்தேன். பின்பு இரண்டு மாதங்கள் கழித்து 2018 ம் வருடம் ஏப்ரல் மாதம் புகார்தாரரிடம் இருந்து ரூ. 2 லட்சத்து 50 ஆயிரம் கடனாக வாங்கினேன். அதற்கு ஆதரவாக மற்றொரு கரூர் வைஸ்யா வங்கி புதுவயல் கிளை காசோலை கொடுத்தேன். அதற்கு மறுநாள் மீண்டும் புகார்தாரரிடம் இருந்து ரூ. 2 லட்சத்து 50 ஆயிரம் கடனாக வாங்கினேன். அதற்கு ஆதரவாக கரூர் வைஸ்யா வங்கி புதுவயல் கிளை காசோலை ஒன்றும், கடனுறுதிசீட்டு

ஒன்றும் கொடுத்தேன். மொத்தம் புகார்தாரரிடம் இருந்து நான் ரூ. 6 லட்சம் கடனாக பெற்றுள்ளேன்.

2) பின்பு மாதம் மாதம் புகார்தாரருக்கு 36 சதவீதம் வட்டி செலுத்தி வந்தேன். அவ்வாறு நான் வட்டி பணம் செலுத்தி வந்த நிலையில் புகார்தாரர் திடீரென காரைக்குடி காவல் துறை துணைகண்காணிப்பாளர் அவர்களிடம் என் மீது புகார் மனு அளித்தார். **அந்த புகார் மனுவின் உண்மை நகல் எ.மா.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி நான் வாங்கிய ரூ. 6 லட்சத்தில் அசல் தொகையில் ரூ. 4 லட்சத்து 95 ஆயிரம் புகார்தாரரிடம் செலுத்திவிட்டேன். பின்பு காவல் துறை துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த புகார் மனு சாக்கோட்டை காவல் நிலையத்திற்கு மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்டது. **சாக்கோட்டை காவல் நிலையத்தில் கொடுத்த CSR 116/2021 உண்மை நகல் எ.ம.சா.ஆ.2 ஆகும்.** மேற்படி சாக்கோட்டை காவல் நிலையத்தில் நடந்த விசாரணையில் நான் கொடுக்கவேண்டிய மீதி பணத்தை 3 தவணைகளாக புகார்தாரருக்கு திருப்பி தரவேண்டும் என்று சொன்னார்கள். அதன்பேரில் புகார்தாரர் அளித்த மனு முடித்து வைக்கப்பட்டது. மேற்படி முடித்து வைத்ததற்கான சாக்கோட்டை காவல் நிலைய ஆய்வாளர் **வழங்கிய ரசீது உண்மை நகல் எ.ம.சா.3 ஆகும்.** பின்பு காவல் நிலையத்தில் ஏற்பட்ட சமாதானத்தின் படி நான் புகார்தாரரிடம் 1 லட்சத்து 95 ஆயிரம் பணத்தை கொடுத்துவிட்டேன். ஆனால் புகார்தாரர் ஆட்களுடன் எனது வீட்டிற்கு வந்து கூடுதல் பணம் கேட்டு தொந்தரவு செய்தார். பின்பு நான் காரைக்குடி காவல் உதவி கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தேன். மேற்படி புகார் பள்ளத்தூர் காவல் நிலையத்திற்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. பள்ளத்தூர் காவல்

நிலையத்தில் நடைபெற்ற விசாரணையில் நான் புகார்தாரரிடம் வாங்கிய அனைத்து பணத்தையும் செலுத்திவிட்டேன் என்றும் மேலும் என்னை தொந்தரவு செய்யக்கூடாது என்றும் பிரச்சனை ஏதேனும் இருந்தால் நீதிமன்றத்தை அனுகவும் என்று அறிவுரை வழங்கி மேற்படி புகார் மனு முடித்துவைக்கப்பட்டது. மேற்படி காவல் நிலையத்தில் புகார்தாரர் பள்ளத்தூர் காவல் ஆய்வாளர் அவர்களுக்கு எழுதிக்கொடுத்த உத்தரவாத **கடிதம் உண்மை நகல் எ.ம.சா.ஆ.4 ஆகும்.**

3) நான் புகார்தாரரிடம் இருந்து வாங்கிய அனைத்து கடனையும் வட்டியுடன் திருப்பி செலுத்திவிட்டேன். அவரிடம் நான் கடன் பெற்றபோது கொடுத்த காசோலைகள் மற்றும் கடனுறுதிசீட்டினை அவரிடம் இருந்து திருப்பி பெற்று தருமாறு வேண்டுகிறேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.01.29 17:10:31 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)